2017 மார்ச் 20] **[திரு. டி. ஜெயக்குமார்]**

அதையும் நாங்கள் சுத்தமாகத் தடை செய்துவிட்டோம். இந்த இரண்டையும் தடை செய்துவிட்ட பின்னர், bottom trawling *என்று சொல்லக்கூடிய இழு வலையைப் பயன்படுத்தக் கூடாது என்று சொன்னார்கள். இந்தியாவிலே கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் படகுகள் இருக்கின்றன. நம்முடைய மீனவர்கள், "படிப்படியாக இழு வலையைப் பயன்படுத்துவதை நாங்கள் குறைத்துக் கொள்கின்றோம் என்று கூறினார்கள். ஆழ்கடலுக்குச் சென்றுவிடுகிறோம்" என்றும், "எங்களுக்கு வருடத்தில் 89 நாட்கள்தான்" மீன்பிடித் தொழில் என்றும் சொன்னார்கள். "எனவே, இதை 3 அல்லது 4 வருடங்களுக்கு நீங்கள் அனுமதியுங்கள். நாங்கள் படிப்படியாக ஆழ்கடல் மீன்பிடிப்பிற்குச் சென்றுவிடுவோம்" என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்தக் கருத்து நல்ல கருத்தாக, நல்ல விஷயமாக இருக்கிறது. அதை இலங்கை மீனவர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். அதற்கு மத்திய அரசு உரிய அழுத்தம் தந்து, இந்த இரண்டு கருத்துகளையும் ஏற்றுக்கொண்டால், இந்தப் பிரச்சினைக்கு நிச்சயமாக ஒரு முடிவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கே.பி.பி. சாமி, உட்காருங்கள், அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் இந்தப் பிரச்சினையை எழுப்பினார். நானும் அனுமதி கொடுத்தேன். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) திரு. சாமி, நீங்கள் உட்காருங்கள்.*

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பச்சாபாளையம் குவாரியில் ஏற்பட்ட வெடி விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்கள். நீங்கள் என்னிடம் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்பு சம்பந்தமாக மட்டும்தான் பேச வேண்டும்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பெரியகோயில், பச்சாபாளையம் அருகில் உள்ள குவாரியில் வேலை பார்த்து வந்த இரண்டு பேர், அங்கு ஏற்பட்ட வெடி விபத்தில் இறந்துவிட்டார்கள். அந்த இரண்டு பேரும் எனது ஒட்டன்சத்திரம் தொகுதியைச் சேர்ந்தவர்கள்.*

[திரு. அர. சக்கரபாணி] *[2017 மார்ச் 20*

திரு. சக்திவேல் மற்றும் திரு. பாலன் என்ற அந்த இரண்டு பேரும் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் கடந்த 10, 15 வருடங்களாக அந்தக் குவாரியிலே வேலை பார்த்து வந்தார்கள். 3 தினங்களுக்கு முன்பாக இறந்த அவர்களின் உடல்கள், எங்கள் தொகுதியில் உள்ள ரெட்டிபட்டி என்ற கிராமத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டன. நானும் அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டேன்.

திரு. சக்திவேல் என்பவரின் வயது 40; அவருடைய மனைவி பெயர் விஜயா, வயது 35; அவர்களுக்கு 3 குழந்தைகள் இருக்கிறார்கள். ஒரு பெண் குழந்தை, வயது 19; மகன்கள் நாகராஜ், வயது 16; விமல்ராஜ், வயது 14; அதேபோல பலியான திரு. பாலன் என்பவரின் வயது 50; அவருடைய மனைவி பெயர் மீனா, வயது 42; மகள்கள் மணிமேகலை, வயது 22; தனலட்சுமி வயது 19; மகன் மணிகண்டன், வயது 19. இறந்துபோன இரண்டு பேரும் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் குடியிருப்பதற்குக்கூட வீடில்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.

முற்பகல் 11–30

எனவே, தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இறந்தவர்களின் குடும்பத்திற்கு தலா 10 இலட்சம் ரூபாய் நிதி வழங்க வேண்டும். அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த திரு. சக்திவேல் மற்றும் திரு. பாலன் ஆகிய இரண்டு பேர்களும் இறந்து விட்டார்கள். இந்நிலையில் அந்தக் குடும்பத்திலுள்ள குழந்தைகளுடைய படிப்பின் தகுதியை அறிந்து, அரசாங்கத்தின் மூலமாக வேலைவாய்ப்பை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 10 இலட்சம் ரூபாய் நிதி வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தையும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தையும் ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொறடா அவர்கள், சூலூர், பச்சாபாளையம் பகுதியில் கல்குவாரியில் ஏற்பட்ட விபத்தினைப்பற்றி இங்கே*

2017 மார்ச் 20] **[திரு. எம்.சி. சம்பத்]**

குறிப்பிட்டார். ஏற்கெனவே நமது சூலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கனகராஜ் அவர்களும் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பச்சாபாளையம் பகுதியில் கல்குவாரி குத்தகை உரிமம் திருவாளர் கோயம்புத்தூர் மினரல்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் திரு. இ. ஆனந்தகுமார் என்பவருக்கு 2–6–2016 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, கல்குவாரியில் 17–3–2017 அன்று பகல் 12 மணி அளவில் குவாரி பணி மேற்கொள்வதற்காக drilling முறையில் துளையிடும்போது குவாரி மேற்பகுதியிலிருந்து எதிர்பாராதவிதமாக பெரிய அளவிலான பாறைகள் மற்றும் கற்கள் உருண்டு, குவாரி கீழ்ப் பகுதியில் பணிபுரிந்து கொண்டிருந்த திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் திரு. சக்திவேல் மற்றும் திரு. பாலன் ஆகியோர்மீது விழுந்தன. அவர்கள் இரண்டு பேரும் கோயம்புத்தூர் இராமகிருஷ்ணா மருத்துவமனையில் மருத்துவச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைப் பலனின்றி மரணமடைந்து விட்டார்கள்.

மேற்படி, குவாரி விபத்து சம்பந்தமாக செட்டிப்பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்படி, எண் 61, நாள் 17–3–2017 அன்று Cr.P.C. 147–ன்படி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணை நடைபெற்று வருகிறது. மேலும், பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையைத் தவிர்க்கும்பொருட்டு, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள், மேற்படி விபத்து தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டு அறிக்கை அளிக்கும்படி Director General of Mines Safety, Chennai அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேலும், இந்த விபத்து தொடர்பாக 17–3–2017 மற்றும் 18–3–2017 ஆகிய இரண்டு நாட்களில் புவியியல் மற்றும் சுரங்கத் துறை உதவி இயக்குநர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோர் மேற்படி குவாரியினை புல தணிக்கை செய்து, மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

மேற்படி, விபத்து நடந்தவுடன் 18–3–2017 அன்று முதல் குவாரியின் அனைத்துப் பணிகளும் கோயம்புத்தூர் மாவட்ட

[திரு. எம்.சி. சம்பத்] [*2017 மார்ச் 20*

ஆட்சியர் அவர்களால் தடை செய்யப்பட்டு, பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இது சூலூர் வட்டாட்சியரால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், காவல் துறை, Director General of Mines Safety *மற்றும் இதர அலுவலர்களின் அறிக்கை வரப்பெற்றவுடன், விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், இந்த விபத்தில் மரணமடைந்த திரு. சக்திவேல் மற்றும் திரு. பாலன் ஆகிய இரண்டு தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்குவது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, மதுரை, வாடிப்பட்டி மற்றும் கொண்டையாம்பட்டி தாலுகாக்களில் உள்ள கல்குவாரிகளில் ஏற்பட்ட விபத்தில் இறந்த மூன்று தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலத் துறையின் மூலமாக ரூ.5 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

4. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இக்கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக* (Panel of Chairmen) *நியமிக்கிறேன். (குறுக்கீடு) திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், நான் அடுத்த அலுவலுக்குச் சென்று விட்டேன். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை; உட்காருங்கள். பிறகு பேசலாம். உட்காருங்கள்.*

1. திரு. சு. ரவி

2. திரு. பி.எம். நரசிம்மன்

3. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

4. திரு. சு. குணசேகரன்

5. திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

6. திரு. P. *வெற்றிவேல்*

(குறுக்கீடுகள்) இல்லை, பேசாமல் உட்காருங்கள்.

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் வாய்ப்புக் கேட்டீர்கள், நான் கொடுத்தேன். (குறுக்கீடுகள்) எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்க முடியாது. மணி என்ன ஆகிறது? (குறுக்கீடுகள்) திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், நீங்கள் என்னுடைய அறையில் வந்து கேட்டிருந்தால், நான் தயாராக வந்திருப்பேன். மாண்புமிகு அமைச்சர்களும் பதில் சொல்வதற்குத் தயாராக வந்திருப்பார்கள். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்; அது என்னுடைய ஆய்வில் உள்ளது. (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருக்கிற பிரச்சினை என்னுடைய ஆய்வில் உள்ளது. (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அதுதான் என்னுடைய ஆய்வில் இருக்கிறது என்று சொல்லிவிட்டேனே? (குறுக்கீடு) அப்படியெல்லாம் நீங்கள்* raise *பண்ண முடியாது. (குறுக்கீடு) நீங்கள் கொடுத்த கடிதம் என்னுடைய ஆய்வில் உள்ளது. அவ்வளவுதான்; உட்காருங்கள். (குறுக்கீடு) அது, என்னவாயிற்று என்றெல்லாம் என்னால் சொல்ல முடியாது. (குறுக்கீடு) அதற்குரிய நடவடிக்கை எடுத்தபிறகு, அந்த நடவடிக்கை என்னவென்று நான் சொல்வேன். அப்போது உங்களுக்குத் தெரியவரும். (குறுக்கீடு) இப்போதுதான் அவர் கொடுத்திருக்கிறார்; அது என்னுடைய ஆய்வில் உள்ளது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது என்னுடைய ஆய்வில் உள்ளது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் அனுமதியில்லை.*

முற்பகல் 11–35

5. வரவு–செலவுத் திட்டம், 2017–2018, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017–2018 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.*

***திரு. பழனிவேல் தியாக ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் பேச வாய்ப்பளித்த எதிர்க்கட்சித் தலைவர் தளபதியாருக்கும், உங்களுக்கும் எனது நன்றியினைத்*